கேட்கின்ற அந்தப் பகுதி தமிழ்நாடு மின்சார வாரியத்தின் எல்லைக்குட்பட்ட பகுதி. ஆகவே, அந்தப் பகுதியிலே தமிழ்நாடு மின்சார வாரியம்தான் சாலையை அமைக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே அணுகுசாலையை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

78—

வேலைவாய்ப்பு அலுவலகம்

__53244—திருமதி க. அழகுவேலு:__

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி தொகுதியினை உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து பணிநாடுநர்களும் பயன்பெறும் வகையில் மாவட்டத் தலைமையிடமான விழுப்புரத்தில் ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சிறப்பாக இயங்கி வருகிறது. வேலைவாய்ப்புத் துறைக்கென தனியாக இணையதளம் செயல்படுத்தப்பட்டு, கல்வித் தகுதிகளைப் பதிவு செய்தல், கூடுதல் பதிவு, பதிவு புதுப்பித்தல் ஆகிய பணிகளை இணையதள வழியாக (online) *மேற்கொள்ள பணிநாடுநர்களுக்கு வசதி செய்து தரப்பட்டுள்ளதால், வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரில்*

செல்ல வேண்டிய அவசியமில்லை. எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சியில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். கள்ளக்குறிச்சி நகராட்சியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும்கூட, நடவாத திட்டங்களையெல்லாம் நடத்தி முடிக்கும் நம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வருங்காலங்களில் கள்ளக்குறிச்சி நகராட்சியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமாய் அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களிலும் ஒரு மாவட்டத்திற்கு ஒன்று என்கிற வகையில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலேதான் இன்றையதினம் வேலைவாய்ப்புக்காக ஆங்காங்கே பதிவு செய்கிற வகையில், 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படித்தவர்களுக்கெல்லாம் ஆன் லைன் மூலமாக அந்தந்தப் பள்ளி வளாகங்களிலேயே பதிவு செய்துகொள்ளும் ஒரு நல்வாய்ப்பை மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள் செய்து தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே, மாநில அளவில் 60,50,903 மாணவ, மாணவிகள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பயன்பெற்றிருக்கிறார்கள். விழுப்புரம் மாவட்டத்திலே மாத்திரம் 2,51,175 மாணவ, மாணவிகள் இந்தத் திட்டத்தின் மூலமாகப் பலன் பெற்றிருக்கிறார்கள். எனவே, வேலைவாய்ப்புத்

2016 பிப்ரவரி 19]

துறைக்கென இணையதள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதால், பெரும்பாலான மனுதாரர்கள் தாங்கள் வசிக்கும் வட்டம், நகராட்சி மற்றும் கிராமங்களிலேயே வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்திருக்கிற காரணத்தால், கள்ளக்குறிச்சியில் தனியாக வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

79—

சத்துணவு மையம்

***54121—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழையூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியின் சத்துணவு மையத்தினை பள்ளி வளாகத்திற்குள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியம், கீழையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடத்திற்கு ரூ.2,20,000/- செலவில் 20 சதுர மீட்டர் பரப்பளவில் வைப்பறையுடன்கூடிய சமையலறை பள்ளி வளாகத்தினுள்ளேயே கட்டி முடிக்கப்பட்டு, 5-2-2015 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.